# அலகு-V

# கல்வி வாய்ப்புகளின் சமத்துவத்தின் தாக்கங்கள்

# IMPLICATIONS OF EQUALITY OF EDUCATIONAL OPPORTUNITIES

## கல்வியில் சமவாய்ப்பு (Equality of Educational Opportunity)

இந்தியா ஒரு ஜனநாயக நாடு. இந்தியாவில் பிறந்த அனைத்து குடிமக்களும் சமமானவர்கள். அனைவரும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முன் சமம் என்பது இந்தியாவின் மிகப் பெரிய பலம். இந்தியாவில் பிறந்த ஒவ்வொரு குடிமகனும் சம வாய்ப்பு பெறுவது அவர்களது உரிமையாகும். அனைவருக்கும் சம வாய்ப்பினை அளிப்பது அரசாங்கத்தின் கடமையாகும். அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்குவதன் மூலம் மட்டுமே ஏற்றத்தாழ்வுகள் அற்ற ஒரு சமத்துவ சமுதாயத்தை உருவாக்க இயலும். அதற்கு முதலில் கல்வியில் அனைவருக்கும் சம வாய்ப்பினை வழங்க வேண்டும். சாதி, மதம், இனம், மொழி, வட்டாரம், நிறம், பாலினம் என எந்தவித பாகுபாடும் இல்லாமல் ஒவ்வொருவரும் அவர்களுக்குரிய திறமை, ஆற்றல், விருப்பம் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்கள் விரும்பும் கல்வி வாய்ப்பினை பெறுவது அவசியமான ஒன்றாகும் இதுவே கல்வியில் சமூக நீதியாகும்.

## கல்வியில் சமவாய்ப்பு / கல்வி வாய்ப்புகளின் சமத்துவம் என்பதன் பொருள் (Meaning of Equality of Educational Opportunity)

கல்வி வாய்ப்புகளின் சமத்துவம் என்பது அனைத்து குழந்தைகளுக்கும் ஒரே மாதிரியான வாய்ப்புகளை வழங்குவது அல்ல. குழந்தைகளின் தனிப்பட்ட வேறுபாடுகள் மற்றும் தேவைகளின் அடிப்படையில் குழந்தைகளின் வளர்ச்சிக்கான கல்வி வாய்ப்புகளை வழங்குதல். கல்வியில் சமத்துவம் என்பது பாலினம், சாதி, மதம், மொழி, இனம், நிறம், பொருளாதார நிலை அல்லது பிறப்பு ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் குழந்தைகளுக்கு குழந்தைகளின் வளர்ச்சிக்கான சமமான கல்வி வாய்ப்புகளை வழங்குவதாகும்.

## கல்வியில் சம வாய்ப்பினை ஏற்படுத்துவதற்கான முன்னெடுப்புகள் (Initiatives to create equal opportunity in education)

### இலவச கல்வி அளித்தல்

இந்தியாவின் பிறந்த அத்தனை குழந்தைகளுக்கும் அவர்களது ஆரம்பக் கல்வி முதல் இடைநிலை கல்வி வரை கட்டாய இலவச கல்வி அளிப்பதன் மூலம் அனைவருக்கும் கல்வியினை கொண்டு சேர்த்தல் நடைபெற்று வருகிறது.

### கட்டாய கல்வி உரிமைச் சட்டம்

கல்வி உரிமைச் சட்டம் 2009-ன் படி அனைத்து மாணவர்களும் பள்ளிக்கு வருவதை அரசு உறுதிப்படுத்தி வருகிறது.

### விளிம்பு நிலை மாணவர்களுக்கு கவனம் செலுத்துதல்

அனைவருக்கும் கல்வி வாய்ப்பினை கொண்டு சேர்ப்பதன் ஒரு அங்கமாக அட்டவணை வகுப்பினர், பழங்குடியினர், ஏனைய விளிம்பு நிலை குழந்தைகள் அனைவருக்கும் கல்வி வாய்ப்பினை அளிக்க அரசு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வருகிறது.

### உணவுத்திட்டம்

அனைத்து மாணவர்களும் பள்ளிக்கு வருவதை உறுதி செய்வதற்காக பள்ளிகளில் மதிய உணவுத்திட்டம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது அது மேலும் விரிவுபடுத்தப்பட்டு காலை உணவுத்திட்டமும் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. இதன் மூலம் வறுமையின் காரணமாக எந்த ஒரு மாணவனும் கல்வி சூழலுக்கு வெளியே இருப்பது தவிர்க்கப்படுகிறது.

### விலையில்லாப் பொருட்கள்

மாணவர்கள் பள்ளியில் கல்வி கற்பதற்கு தேவையான பாட புத்தகங்கள், எழுது பொருட்கள், குறிப்பேடுகள், வினா வங்கிகள், சீருடை இன்னும் பல பொருட்கள் அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றன.

## உதவித்தொகை

மாணவர்களுக்கு அவர்களுடைய சமூக பொருளாதாரச் சூழலுக்கு ஏற்ப இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் கல்வி உதவித் தொகையானது வழங்கப்படுகிறது. இதன் மூலம் சமூகத்தில் பின் தங்கிய நிலையில் உள்ள மக்களின் குழந்தைகளும் கல்விக்கூடங்களுக்கு வருவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

## அனைவருக்குமான கல்வி

மாறி வரும் சமூக பொருளாதார தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப அனைவருக்கும் கல்வி சேரும் வகையில் அனைவரையும் உள்ளடக்கிய கல்வி திட்டமானது அரசாங்கத்தின் மூலமாக சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் மாற்றுத்திறனாளிகளும், மூன்றாம் பாலினத்தினர்களும், கற்றல் குறைபாடு உடைய மாணவர்களும் கல்வி கற்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

## அரசியலமைப்பு விதிகளில் சமத்துவம் (Equality in constitutional provisions)

இந்திய சட்டத்தின் 14வது பிரிவின் கீழ் சமத்துவத்திற்கான உரிமை வழங்கப்படுகிறது. அது அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும். இது ஒவ்வொரு நபருக்கும் சட்டத்தின் முன் சம உரிமை மற்றும் சட்டங்களின் சம பாதுகாப்புக்கான உத்தரவாதங்களை உறுதி செய்கிறது விதி 14 சட்டத்திற்கு மேலானவர்கள் யாரும் இல்லை என்பதை வரையறுக்கிறது. சட்டத்தின் பார்வையில் அனைவரும் சமம்.

1.1 சட்டத்தின் முன் சமத்துவம்

“**எந்தவொரு நபருக்கும் சட்டத்தின் முன் சமத்துவத்தை அரசு மறுக்காது**”.

1.2 சமத்துவத்திற்கான உரிமையின் பொருள்

இதன் பொருள் இந்தியாவின் எல்லைக்குள் வாழும் ஒவ்வொரு நபருக்கும் சட்டத்தின் முன் சம உரிமை உள்ளது. இதன் பொருள் அனைத்தும் ஒரே வரியில் சமம். மதம், இனம், சாதி, பாலினம், பிறந்த இடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு இல்லை. அதன் அர்த்தம் அனைவரும் சமமாக சமத்துவமாக கருதப்படுவார்கள். மேலும் தாழ்ந்த அல்லது உயர் வகுப்பின் அடிப்படையில் எந்த பாகுபாடும் இருக்காது.

## பள்ளிக்கல்வியில் சமத்துவமின்மை (Inequality in Schooling)

கல்வியில் சமமின்மை தொடக்க கல்வி நிலைக்கு முன்ப ஆரம்பமாகிறது. பெரும்பாலான வறுமை கோட்டிற்கு கீழே இருப்பவர்கள் தங்களின் குழந்தைகளின் கல்வியினை ஒன்றாம் வகுப்பில் இருந்து தொடங்குகின்றனர். ஆனால் நடுத்தர குடும்பத்தினரும் வசதி வாய்ப்பு உடையவரும் தொடக்க கல்விக்கு முன்பே மூன்றாண்டுகள் முன் கல்வியினை தங்கள் குழந்தைகளுக்கு வழங்குகின்றனர். பெரும்பாலும் வறுமை கோட்டிற்கு கீழே உள்ள பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அரசு பள்ளிகளிலும் நடுத்தர வர்க்கத்தினர் ஆங்கில வழி பள்ளிகளிலும் மேல்தட்டு வர்க்கத்தினர் சிபிஎஸ்இ பள்ளிகள் அல்லது இன்டர்நேஷனல் போர்டு பள்ளிகளிலும் தங்கள் குழந்தைகளுக்கான கல்வியினை தேர்ந்தெடுக்கின்றனர்.

அரசுப் பள்ளிகளை தனியார் பள்ளிகளுடன் ஒப்பிடும் பொழுது போதுமான அளவு ஆசிரியர்களின் எண்ணிக்கையும் உட்கட்டமைப்புகளில் பற்றாக்குறை வசதியும் அரசு பள்ளிகளில் காணப்படுகிறது. ஒத்த வயதுடைய மாணவர்கள் அவர்கள் படிக்கும் பள்ளிக்கேற்ப பயிற்று மொழியாக தாய் மொழியையோ அல்லது ஆங்கிலத்தையோ கொண்டு படிக்கின்றனர்.

## கல்வியில் சமவாய்ப்பின்மை, பாகுபாடுகள் மற்றும் விளிம்பு நிலைத்தன்மை (Inequality, Discrimination and Marginalisation in Education)

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற அடிப்படையில் இந்தியா உருவாக்கப்பட்டுள்ளது. இந்திய அரசியலமைப்பின் விதிகள் 14 முதல் 18 வரை

சமத்துவ உரிமை குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தியாவில் உள்ள குடிமக்கள் அனைவருக்கும் சமூக மற்றும் அரசியல் சமத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம், கல்வி ஆகியவற்றின் அடிப்படையில் மக்களிடையே அரசு எவ்விதமான பாகுபாடுகளையும் ஏற்படுத்தக் கூடாது என்று குறிப்பிடுவது தான் சமத்துவ உரிமை ஆகும். மக்களிடையே சமத்துவம் என்பது மக்களாட்சியின் அடிப்படைத்தன்மையாகும். ஆனால் சமத்துவமின்மை என்பது இன்றளவும் நிலவுகிறது என்பதே உண்மை.

## சமுதாயத்தில் சமூக சமத்துவமின்மை (Social inequality in Society)

சமூகத்தில் வாழ்கின்ற மக்கள் அனைவரும் ஒன்று போல் காணப்படுவதில்லை உடலியல்புகளால், மனத்திறன்களால், அறிவுக்கூர்மையால் பல வேறுபாடுகளுடன் காணப்படுவர். இது சமத்துவமின்மை ஆகும். ஆனால் சமூகத்தில் காணப்படும் சாதி, சமயம், இனம், வர்க்கம், பாலின வேறுபாடு அரசியல் அதிகாரம் போன்றவைகள் மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட சமுதாயத்தால் அங்கீகரிக்கப்பட்டதுமான ஏற்றத்தாழ்வுகள் ஆகும்.

## சமுதாயத்தில் சமூக சமத்துவமின்மை என்பதன் பொருள்

முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளைத் தடுப்பதையே சமூக சமத்துவமின்மை அல்லது சமூக அநீதி (Social inequality) என்ற சொல் குறிப்பிடுகிறது. பொருளாதார மற்றும் அரசியல் பலம் உள்ளவர்கள், வெகுமதிகள், திறன், செல்வாக்கு மற்றும் வாய்ப்புகளை அவர்கள் சொந்த நலனுக்கு மட்டுமே பகிர்ந்து கொள்வதையே சமூக சமத்துவமின்மை என்று கார்ல்மார்க்ஸ் கூறுகிறார்.

## சமூக சமத்துவமின்மையின் விளைவுகள்

1. சமூக சமத்துவமின்மையால் சம உரிமைகளும், சுதந்திரமும் இழக்கப்படுகின்றன.
2. சமூகத்தில் அமைதியின்மையை தோற்றுவிக்கிறது.
3. சமூக சுரண்டல்களும், ஊழல்களும் அதிகரிக்கின்றன.
4. சமூக வளங்களை நியாயமான முறையில் பகிர்ந்தளிப்பதில் சிக்கல் ஏற்படுகிறது.

5.சமத்துவமின்மையால் நலிந்தபிரிவினரும், பிற்படுத்தப்பட்டவர்களும், வன்முறைக்கு ஆளாகின்றனர்.

6. சமூகத்தில் வறுமை, சூதாட்டம், திருட்டு போன்றவைகள் பெருகுகின்றன.

7. போதைப்பழக்கம், தற்கொலை, பிச்சை எடுத்தல், ஆபாசம், பயங்கரவாதம், கொலை, கொள்ளை போன்ற வன்முறைகள் தோன்றுகின்றன.

சமூகத்தில் காணப்படும் சமூக நேர்மையற்ற செயல்களால் உரிமை பெறுவதில் சமத்துவமின்மை, அரசியலில் சமத்துவமின்மை, பொருளாதாரத்தில் சமத்துவமின்மை, சட்டத்தில் சமத்துவமின்மை, சமூக வளங்களை பகிர்ந் தளிப்பதில் சமத்துவமின்மை, கல்வி பெறுவதில் சமத்துவமின்மை போன்றவைகள் ஏற்படுகின்றன.

## கல்வியில் சமவாய்ப்பின்மை, பாகுபாடுகள் மற்றும் விளிம்பு நிலைத் தன்மைக்கான காரணங்கள் (Causes for Inequality, Discrimination and Marginalisation in Education)

### மாநிலங்களுக்கு இடையேயான மாறுபட்ட கல்விச்சூழல்

இந்திய மாநிலங்களுக்கிடையே மாறுபட்ட கல்வி நிலைக் காணப்படுகிறது. கேரளா, ஆந்திரா, தமிழ்நாடு, மகாராஷ்டிரம் மற்றும் டெல்லி போன்றவை கல்வி நிலையில் மேம்பட்டு உள்ளன. ஒரிஸா, பீஹார், அஸ்ஸாம், உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்கள் கல்வி நிலையில் பின் தங்கி உள்ளன. மாறுபட்ட அரசியல் சூழல் இதற்கு காரணமாகக் கொள்ளலாம்.

### பொருளாதார சூழல்

பெற்றோர்களின் செல்வநிலை குழந்தைகளுக்குக் கிடைக்கும் கல்வி வாய்ப்பில் பிரதிபலிக்கிறது. செல்வந்தர்கள் பணத்தைக் கொடுத்துத் தரமான கல்வியைப் பெற்றுவிடுகின்றனர். ஏழ்மையான குடும்பங்களில் உள்ள குழந்தைகள்

சிறந்த அறிவுக் கூர்மையுடன் இருந்தாலும் அவர்களுக்குக் கல்வி வசதி குறைவாகவே கிடைக்கிறது.

## வணிகமயமான கல்வி

இன்றைய கல்வி நிறுவனங்கள் பெரும்பாலும் கல்வியைப் பற்றி அக்கறை கொள்ளாமல் இலாப நோக்கத்துடனே செயல்படுகின்றன. இலாபத்தைக் குறிக்கோள்களாகக்கொண்டு செயல்படுவதால் கற்பிக்கும் பாடப் பொருள் மற்றும் கற்பிக்கும் முறை ஆகியவைகளிலும் சம வாய்ப்பின்மை ஏற்படுகிறது. மாணவர்களிடம் புரிந்து கொள்ளும் ஆற்றல் குறைந்து குருட்டு மனப்பாடம் செய்வதே மாணவர்கள் மத்தியில் வளருகிறது.

## கல்வி நிறுவனங்களுக்கு இடையேயான சமமின்மை

இந்தியாவில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்களும் ஒரே மாதிரியான பாடத்திட்டத்தை பின்பற்றுவது இல்லை. உதாரணமாக மத்திய அரசின் சிபிஎஸ்சி (CBSE) பாடத்திட்டத்தை பின்பற்றும் கல்வி நிறுவனங்கள், ஐசிஎஸ்இ (ICSE) பாடத்திட்டத்தை பின்பற்றும் கல்வி நிறுவனங்கள், மாநில அரசின் பாடத்திட்டத்தை பின்பற்றும் கல்வி நிறுவனங்கள், இன்டர்நேஷனல் போர்டு(IB) கல்வி திட்டத்தை பின்பற்றும் கல்வி நிறுவனங்கள் என கல்வி நிறுவனங்கள் செயல்படும் வகையிலேயே பல்வேறு வேறுபாடுகள் உள்ளன. இவ்வாறு கல்வி நிறுவனங்கள் இடையே நிலவும் வேறுபாடும் மாணவர்களிடையே கல்வியில் சம வாய்ப்பின்மையை ஏற்படுத்துகின்றது. மேலும் அரசாங்கத்தால் நிர்வாகிக்கப்படும் பள்ளிகளுக்கும் தனியார்களால் நிர்வகிக்கப்படும் பள்ளிகளுக்கும் இடையே கட்டமைப்பு வசதி, கட்டணம் என பல்வேறு அம்சங்கள் நிறைய வேறுபாடுகள் நிலவுவதும் கல்வியில் சமவாய்ப்பின்மையை ஏற்படுத்துகிறது.

## சமூக-கலாச்சார பின்னணிகள்

மலைவாழ் மக்கள், பின்தங்கிய நிலையிலுள்ள மக்களிடம் காணப்படும் கல்வி வளர்ச்சி குறைந்து காணப்படுகிறது. மலைவாழ் மக்கள், பழங்குடியினர்,

பிற்பட்ட வகுப்பினர் போன்றவர்களுக்குப் போதிய கல்வி வாய்ப்புகளும், வசதிகளும் இல்லாத காரணத்தால் கல்வியில் சம வாய்ப்பின்மை ஏற்படுகிறது. சாதி, இனம், பால், சமயம் இவற்றின் அடிப்படையில் கல்வி அளிப்பதாலும், அவர்களிடையே கல்வி வசதி வாய்ப்புகளில் சமவாய்ப்பின்மை ஏற்படுகிறது.

### வீட்டுச்சூழல்கள்

வீட்டுச்சூழல்கள் அனைவருக்கும் படிப்பதற்கான வசதிகள் எளிதாகக் கிடைப்பதில்லை. நகர்ப்புற மாணவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகள் கிராமப்புற மாணவர்களுக்கு கிடைப்பதில்லை. கிராமப்புற மக்களுக்கு கற்றலில் பெற்றோரின் துணைபுரிதல் கிடைக்காமல் போகின்றன. வீட்டின் சூழலும் உகந்ததாக இருப்பதில்லை. மலைவாழ் பழங்குடியின மக்களின் வீடுகளுக்கு மின்சார வசதிகூட கிடைக்காத நிலையில் கல்வியில் சமவாய்ப்பின்மை நேரிடுகிறது.

### பாலின வேறுபாடுகள்

ஆண் - பெண் கல்வியில் காணப்படும் வேறுபாடுகள் பெற்றோர்கள் ஆண் பிள்ளைகளுக்குக் கல்வியளிப்பதில் காட்டும் அக்கறை, பெண் குழந்தைகளிடம் காட்டுவதில்லை. இதனால் கல்வி நிலையங்களில் ஆண்களின் எண்ணிக்கை அதிகம் காணப்படுகிறது. மேலும் ஆண்களுக்கு ஏற்ற படிப்புகளே நம் நாட்டில் அதிகம் காணப்படுவதால் பெண்களுக்கு படிக்க வாய்ப்பில்லாமல் போகிறது.

## சமத்துவமின்மையின் வகைகள் (Types of Inquality)

### சாதி அடிப்படையிலான சமத்துவமின்மை (Caste-based inequality)

இந்தியாவில் சாதி என்பது தொன்று தொட்டு வந்த ஒரு சமூக அமைப்பாகும். சாதியானது இந்தியாவில் வேரூன்றி நிறுவனமாக விளங்கியதோடு இன்றும் பழக்கத்தில் இருந்து வருகிறது. தொழிலின் அடிப்படையில் அமைந்த சாதிப்பிரிவுகள் நாளடைவில் பிறப்பின் அடிப்படையில் தலை தூக்கியது. 'சாதி' என்ற சொல்லிற்குரிய ஆங்கிலச் சொல் போர்ச்சுகீசிய சொல்லான 'Caste'

என்பதிலிருந்து உருவானது ஆகும். இதற்குரிய பொருள் குடும்பம் (breed) அல்லது வம்சம் (lineage) என்று கருதப்படுகிறது. சாதி என்ற சொல் மனித சமுதாயத்தின் இனம் (race) அல்லது பிரிவு (kind) போன்ற பொருளினை உணர்த்துகிறது. ஒரு இனத்திற்குள் நான் உயர்ந்தவன் நீ தாழ்ந்தவன் என்ற வேற்றுமை எழுதுகிறது.

## பாலின அடிப்படையிலான சமத்துவமின்மை (Gender-based inequality)

ஆண் பெண் பாலின வேறுபாடு வீட்டில் தொடங்கி நாட்டின் உயர் பதவியான குடியரசு தலைவர் பதவி வரை காணப்படுகிறது. வீடு, பள்ளி, பணி புரியும் இடம், பொது இடங்கள் என அனைத்து இடங்களிலும் ஆண்களும் பெண்களும் சமமாக நடத்தப்படுவதில்லை. ஆண்களுக்கு கிடைக்கும் உரிமைகள் சலுகைகள் அனைத்தும் பெண்களுக்கு கிடைப்பதில்லை. இதனையே பாலின பாகுபாடு என்று கூறுகிறோம். குழந்தை பிறந்த உடனேயே ஆணா? பெண்ணா? என்று அறிந்து கொள்ள எழும் கேள்வியின் மூலம் பாலின பாகுபாடு சமூகத்தில் தொடங்குகின்றது. வீடுகளில் குழந்தை வளர்ப்பு என்ற நிலை இல்லாமல் ஆண் குழந்தை வளர்ப்பு பெண் குழந்தை வளர்ப்பு என்று பாகுபாடு காட்டப்படுகிறது. பணியிடங்களில் ஊதியம், பதவி உயர்வு போன்ற அம்சங்களில் பாலின பாகுபாடு அதிக அளவில் காணப்படுகிறது. அனைத்து மக்களுக்கும் தேவையான வசதிகளை செய்து தரக்கூடிய அரசாங்கத்தின் அங்கமாக இருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகளில் கூட பெரும்பாலும் ஆணாதிக்கமே காணப்படுகிறது பெண்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது.

## வகுப்பு / வர்க்க அடிப்படையிலான சமத்துவமின்மை (Class-based inequality)

சமூக அமைப்பின் அடிப்படை வேலையாகும். வேலையின் தன்மையைக் கொண்டு வர்க்க அமைப்பு உருவாக்கப்படுகின்றது. சமூகத்தில் வேலை அவற்றின் முக்கியத்துவம் அவற்றினால் ஏற்படும் பயன்கள் இந்த வேலைக்கு தேவைப்படும் கல்வி தகுதி மற்றும் திறமைகளை கொண்டுசமூகத்தில் ஒரு அடுக்கமைவு ஏற்படுத்தப்பட்டது. இதனையே வர்க்கம் என்று கூறுகின்றனர். பொதுவாக சமூகத்தில் உயர் வர்க்கத்தினர் என்பவர்கள் அதிகாரம் மிக்கவர்களாகவும்,

கடைநிலை வர்க்கத்தினர் உடல் உழைப்பை அதிகம் செலவழிப்பவர்களாகவும், இடைநிலை வர்க்கத்தினர் அறிவு சார்ந்த பணியினை மேற்கொள்பவர்களாகவும் கருதப்படுகின்றனர். இத்தகைய வர்க்க முரண்பாடு சமூகத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும் எளியோர்கள் மீதான சுரண்டலையும் அதிகரிக்கச் செய்கின்றது. சமூகத்தில் முதலாளி-தொழிலாளி, ஏழை-பணக்காரன், இருப்பவன்-இல்லாதவன் போன்ற பிரிவினைகளுக்கான அடிப்படை இந்த வர்க்க முரண்பாடு ஆகும்.

### வட்டார அடிப்படையிலான சமத்துவமின்மை (Regional-based inequality)

இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களும் ஒரே மாதிரியான வளர்ச்சியினை கொண்டிருக்கவில்லை. கல்வி, சுகாதாரம், மனித வளம், பொருளாதார, உட்கட்டமைப்பு வசதிகள் என பல்வேறு அம்சங்களில் மாநிலங்களுக்கிடையே ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது. உதாரணமாக தமிழ்நாடு, கேரளா, ஆந்திரம் போன்ற மாநிலங்கள் கல்வியில் மிகச் சிறப்பாக உள்ளன. ஆனால், பீகார், ஜார்க்கண்ட், உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்கள் கல்வியில் பின்னடைந்த மாநிலங்களாக உள்ளன. மேலும் ஒரே மாநிலத்திலேயே பல்வேறு மாவட்டங்களில் இடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. உதாரணமாக தமிழ்நாட்டில் சென்னை, கோவை, திருப்பூர் போன்ற மாவட்டங்கள் தொழில் வளம் மிக்க மாவட்டங்களாக உள்ளன. ஆனால் மதுரை, தேனி, விருதுநகர் போன்ற மாவட்டங்களில் இத்தகைய தொழில் வளம் இல்லை. விருதுநகர், திருநெல்வேலி, கோவை, திருப்பூர் போன்ற மாவட்டங்கள் கல்வியில் உயர்ந்த நிலை அடைந்துள்ளன. அதே நேரம், கடலூர் தர்மபுரி, திருவண்ணாமலை போன்ற மாவட்டங்கள் கல்வியில் அத்தகைய வளர்ச்சி அடையவில்லை. இவ்வாறு வட்டாரங்களுக்கு இடையேயான சமமின்மையும் கல்வி வளர்ச்சியில் சமமின்மையை ஏற்படுத்துகிறது.

### **கல்வி மூலம் சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல் (Elimination of social inequalities through education)**

- இந்தியாவில் பிறந்த அனைவருக்கும் கட்டாய இலவச கல்வியினை உயர் கல்வி வரை அளித்தல்.
- பின்தங்கிய விளிம்பு நிலை மக்களும் கல்வி சூழலை அடைவதற்கான வசதி வாய்ப்புகளை உருவாக்கித் தருதல்.
- மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகையினை அதிகரித்தல்.
- கல்விக்கூடங்களில் மாணவர்களுக்கான சேர்க்கை இடங்களை அதிகரித்தல்.
- கல்வியில் தனியார் மையத்தை குறைத்து பொதுப்பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
- தனியார் பள்ளிகளிலும் கல்வியினை இலவசமாக வழங்குதல்.
- மாணவர்கள் எளிதாக பள்ளிக்கு சென்று வர கல்விக்கூடங்களை அருகாமைப் பள்ளிகளாக அமைத்தல்.
- கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தினை மிக கடுமையாக நடைமுறைப்படுத்துதல்.
- மாறிவரும் நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றவாறு பாடத்திட்டங்களை மாற்றி அமைத்தல்.
- கல்வி பாடத்திட்டங்களில் தேவையற்ற பகுதிகளை நீக்கி மாணவர்களுக்கான பாடச் சுமையினை குறைத்தல்.
- மாணவர்களுக்கான விடுதி வசதியினை சிறப்பான முறையில் ஏற்படுத்திக் கொடுத்தல்.
- பின் தங்கிய மாநிலங்களுக்கு அல்லது மாவட்டங்களுக்கு போதுமான அளவு நிதி ஒதுக்கி கல்வி நிலையை மேம்படுத்துதல்.
- கிராமப்புறங்களில் அதிக அளவு கல்விக்கூடங்கள் திறந்து கிராமப்புறமானவர்கள் இடையே கல்வியை கொண்டு சேர்த்தல்.
- கல்வியின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வினை நாடு முழுவதும் ஏற்படுத்துதல்.

- உடல் ஊனமுற்றோர் கற்றல் குறைபாடு உடையோரும் பொதுப்பள்ளியில் இணைந்து கற்பதற்கான சூழலை உருவாக்குதல்.
- தரமான காலை மற்றும் மதிய உணவு திட்டத்தினை நாடு முழுவதும் அமல்படுத்துதல்.
- கற்றலுக்கு தேவையான அனைத்து பொருட்களையும் விலை இல்லாமல் கல்விக்கூடங்களில் வழங்குதல்.
- சாதி மதம் இனம் மொழி போன்ற பாகுபாடுகளை கடந்து எதிர்கால முன்னேற்றத் திணை கருத்தில் கொண்டு அறிவியல் பூர்வமான கல்விக் கொள்கையை உருவாக்குதல்.
- கல்வியுடன் தொழிற்கல்வியையும் இணைத்து கொடுப்பதன் மூலம் அவர்களின் எதிர்காலத்தினை வளமாக்குதல்.
- தொலைநிலைக்கல்வி, பகுதி நேரக்கல்வி, இணைய வழிக்கல்வி என பல்வேறு முறைகளில் கல்வியினை அனைவருக்கும் கொண்டு சேர்ந்து சேர்த்தல்

## விளிம்பு நிலை அல்லது ஒதுக்கப்பட்ட குழுக்களுக்கான கல்வி: தலித்துகள் பழங்குடியினர் மற்றும் பெண்கள் (Education for marginalized groups: Dalits, tribals and women)

### தலித் மாணவர்களுக்கான கல்வி திட்டங்கள்

- இலவச கல்வி திட்டம்
- தேர்வு கட்டணத்தில் சலுகை
- பள்ளி கல்வி முதல் ஆராய்ச்சி கல்வி வரை கல்வி உதவித்தொகை
- இலவச மாணவர் நல விடுதிகள்
- உயர்கல்வி இட ஒதுக்கீடு
- சிறப்பான தேர்ச்சி பெரும் மாணவ மாணவர்களுக்கு கல்வி உதவி தொகைகள்
- ஆதிதிராவிட நலத்துறையின் வாயிலாக அரசு பணிகளுக்கான இலவச பயிற்சிகள்

## பழங்குடியின மாணவர்களுக்கான கல்வி திட்டங்கள்

- இலவச கல்வி வழங்குதல்
- தேர்வு கட்டணத்தில் சலுகை
- இட ஒதுக்கீடு வழங்குதல்
- பள்ளி கல்வி முதல் ஆராய்ச்சி கல்வி வரை கல்வி உதவித்தொகை
- மலைப்பகுதிகளில் உண்டு உறைவிட பள்ளிகள்
- இல்லம் தேடி கல்வித் திட்டம்
- மாணவர்கள் பள்ளிகளுக்கு சென்று வர பேருந்து வசதிகள்
- சாலை வசதிகளை மேம்படுத்திக் கொடுத்தல்
- சுகாதார வசதிகளை அதிகரித்தல்
- தொழிற்பயிற்சிகளை வழங்குதல்
- விவசாய பொருட்களை சந்தைப்படுத்துதல் தொடர்பான செயல் நெறி கல்வியை அளித்தல்

## பெண்களுக்கான கல்வி திட்டங்கள்

- மகளிர் கல்வி நிலையங்கள் திறத்தல்
- மகளிர் நல விடுதிகள் திறத்தல்
- கல்வி கட்டணத்தில் சலுகை வழங்குதல்
- அதிகமான பெண் ஆசிரியர்களை பணியில் அமர்த்துதல்
- இலவச நாப்கின் வழங்குதல்
- இலவச மிதிவண்டி வழங்குதல்
- பெண்களுக்கான சிறப்பு பேருந்து அசைவினை வழங்குதல்
- சிறப்பு உதவி தொகை வழங்குதல்
- மாதவிடாய் சுழற்சி குறித்து விழிப்புணர் வழங்குதல்
- கைத்தொழில் பயிற்சி அளித்தல்